# வலயக்கல்விப் பணிமனை - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### தமிழ்மொழியும் இலக்கியமும்

al Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vavuniya North Zonal Education Office- Vav

சுட்டெண் ....................................................

**தரம்: 07** **நேரம் - 2.00 மணித்தியாலம்**

## பகுதி I

- **மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) "காப்பவிழ்ந்த மலரும் அல்ல கழுநீர்த்தொடையும் அல்ல". இங்கு கழுநீர் என்பது

   1) கார்த்திகைப்பூ 2) மல்லிகைப்பூ
   3) செங்குவளைப்பூ 4) தாமரைப்பூ

2) நிருமலமான மனத்துடன் வாழ்வது சிறந்தது. இங்கு நிருமலம் என்பது?

   1) அமைதி 2) அன்பு 3) பரிசுத்தம் 4) தியாகம்

3) இயற்கையை வரலாற்றாசிரியர்கள் ஆய்வு செய்து வருகின்றனர். இங்கு இயற்கை என்பதன் எதிர்ப்பதம்?

   1) செயற்கை 2) பருக்கை 3) நவீனம் 4) மருட்கை

4) எமக்கு ஆக்கம் தரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். இங்கு ஆக்கம் என்பதன் எதிர்ப்பதம்?

   1) சாந்தம் 2) கடினம் 3) சுத்தம் 4) கேடு

5) காடும் காடு சார்ந்த பகுதியும் எவ்வாறு அழைக்கப்படும்?

   1) மருதம் 2) முல்லை 3) பாலை 4) நெய்தல்

6) பூனை – கடுவன் என்பது போல ஆண் யானையின் பெயர் யாது?

   1) களிறு 2) பிடி 3) பெட்டை 4) பேடு

7) அல்லும் பகலும் அலைந்து வந்தேன். இங்கு அல்லும் பகலும் என்பது?

   1) இணைமொழி 2) அடுத்துத்தொடர்
   3) பழமொழி 4) இரட்டைக்கிளவி

8) ஆசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். இங்கு வந்துள்ள செயற்படுபொருள் யாது?

   1) ஆசிரியர் 2) மாணவர் 3) அறிவுரை 4) வழங்கினார்

9) குயவன் பானையை வனைந்தான். இங்கு குயவன் என்பதன் எதிர்ப்பாற் சொல் யாது?

   1) குயவி 2) குயவினி 3) குயத்தி 4) குயவித்தி

10) என்ன விசயம்? இங்கு விசயம் என்பதன் திருந்திய வடிவம் யாது?

   1) கதை 2) செய்தி 3) வதந்தி 4) விடயம்

11) உயிர்மெய் எழுத்துக்கள் எத்தனை?

   1) 30 2) 247 3) 18 4) 216

12) “அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு” என்ற பழமொழியின் கருத்து யாது?

1) ஒற்றுமையின் பலம் 2) சகோதரத்துவம்
3) சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துதல் 4) முயற்சி

13) சல சலவென நதியொலி எழுப்பி ஓடியது. இங்கு சல சல என்பது?

1) இரட்டைக்கிளவி 2) அடுக்குத்தொடர்
3) உவமைத்தொடர் 4) அடுக்கிடுக்குத்தொடர்

14) இயல், இசை, நாடகம் என்பன எவ்வாறு அழைக்கப்படும்?

1) முச்சுடர் 2) முத்தமிழ் 3) முக்கனி 4) முத்தாரம்

15) நானும் தம்பியும் அம்மாவும் கடைக்குச் ........................ முடிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

1) சென்றேன் 2) சென்றான் 3) சென்றோம் 4) சென்றார்கள்

16) ஐயோ! இப்படி ஆகிவிட்டதே. இங்கு பயன்படுத்தப்பட்ட நிறுத்தக் குறிகள்.

1) முற்றுப்புள்ளி, முற்காற்புள்ளி 2) முற்றுப்புள்ளி, வினாக்குறி
3) மெய்ப்பாட்டுக்குறி, முற்றுப்புள்ளி 4) வினாக்குறி, முற்றுப்புள்ளி

17) பெண்ணரசி என்பதைப் பிரித்து எழுதினால் வருவது?

1) பெண் + ணரசி 2) பெண்ண + ரசி 3) பெண் + அரசி 4) பெண் + சி

18) கமலினி பத்திரிகையைப் படித்தாள். இங்கு வந்துள்ள எழுவாய், பயனிலையைத் தருக.

1) கமலினி, பத்திரிகை 2) கமலினி, படித்தாள்
3) படித்தாள், பத்திரிகை 4) பத்திரிகை, படித்தாள்

19) நான் பாடசாலைக்குப் போவேன். இங்கு வந்துள்ள காலம்?

1) இறந்தகாலம் 2) நிகழ்காலம்
3) எதிர்காலம் 4) பாடசாலைக்காலம்

20) பின்வரும் வாக்கியங்கள் சரியான ஒழுங்கில் அமைந்த கூட்டத்தைத் தெரிவு செய்க?

அ) சிலர் அதில் வாழ்ந்து வந்தார்கள்.
ஆ) அந்த ஊர் மிகச்சிறியது.
இ) ஆனாலும் பெரிய உள்ளங்களைப் பெற்ற உபகாரிகள்

1) இ, அ, ஆ 2) அ, இ, ஆ 3) ஆ, இ, அ 4) அ, ஆ, இ

(20× 2 = 40 புள்ளிகள்)

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கு விடை தருக.**

01) பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களில் கட்டுரை எழுதுக.

1) எனது வீட்டுத் தோட்டம்
2) திருக்குறளின் பெருமை
3) வயற்காட்சி
4) மகாத்மாகாந்தி

(20 புள்ளிகள் )

02) உமது பாடசாலையில் நடைபெற்ற தமிழ்மொழித்தினப் போட்டி நிகழ்வு பற்றி உமது நண்பன் / நண்பிக்கு 50 சொற்களில் கடிதம் எழுதுக.

(10 புள்ளிகள் )

03) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்க விடை தருக.

1) குறிஞ்சி மலர் பற்றிய குறிப்புக்கள் காணப்படும் இரண்டு நூல்களும் எவை?
2) “தாங்கள் இந்த ஊருக்கு எழுந்தருளியது கலைமகளே எழுந்தருளியது போல் உள்ளது” யாரால் யாருக்குக் கூறப்பட்டது?
3) அந்தரேயின் தாயின் குணப்பண்புகள் இரண்டு தருக?
4) மலரும் மாலையும் என்ற நூலை எழுதியவர் யார்?
5) மனிதனுக்கு இருக்கும் ஒரே ஒரு தலையாய கடமை யாது?
6) விபுலானந்தரின் இளமைப்பெயர் யாது?
7) “நிலம் என்னும் நல்லாள் நகும்” என்பதன் கருத்து யாது?
8) யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன் என்ற தொடர் எதைக் குறிப்பிடுகிறது?
9) காந்தியடிகள் எழுதிய சுயசரிதையின் பெயர் என்ன?
10) மெய்யெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? அவை எவை?

( $10 \times 2 = 20$ புள்ளிகள் )

04) பின்வரும் சொற்களை வைத்து பூரண வாக்கியம் அமைக்குக.

1) உபகாரி
2) பொழில்
3) ஆகாரம்
4) ஓடியாடி
5) மடமட

( $5 \times 2 = 10$ புள்ளிகள் )